உ
சிவமயம்



ஆதிசைவ குருகுல குருநாதகுருக்கள் மரபில் வந்துதித்த உயர்திலகம்

உயர் திரு அமரர்

# நடராசாக்குருக்கள் மீனாட்சி அம்மா

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

14-05-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்.



யாழ் மாவட்டம் வடமராட்சிப் பகுதியில்
தொட்டில் கந்தசாமிகோயிலடி
கெருடாவில் தெற்கைப் பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் கொண்ட
ஆதி சைவ குருகுல குருநாதக் குருக்கள் மரபில்
வந்துதித்த உயர் திலகம் உயர்திரு

அமரர்

# நடராசாக்குருக்கள் மீனாட்சிஅம்மா

அவர்களின் சிவபேறு குறித்து வெளியிடப்பட்ட

## நினைவு மலர்

14.05.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்னையைப் போல சிறந்த தெய்வம்

தரணியில் இல்லை என்று

முந்தையோர் சொல்லி வைத்த

முறைமையும் அது தானன்றோ

சிந்தையால் மகிழ்ந்து இந்த

சிறப்புக்கள் பலவும் செய்த

தாய்க்கு நாம் வழங்கும்

சமர்ப்பணம் இதுதான் அம்மா

— குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



மண்ணில்
18.08.1950

விண்ணில்
29.04.2011

# அமரர்
# நடராசாக்குருக்கள்- மீனாட்சி அம்மா
அவர்களின்

## திதிவெண்பா

ஆண்டு கர வருஷ நல் சித்திரை வெள்ளி
பூண்ட அபரபக்க துவாதசி நன் நாள்- நீண்ட புகழ்
நடராசாக்குருக்கள்- மீனாட்சி அம்மா அன்னை
சென்றடைந்தார் தொட்டில் கந்தசுவாமியார் இறையடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் துதி



பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

## தேவாரம்

நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொரு பாகமுடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிருமே.

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப் பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய்
தேனினை சொரிந்து புறம்புறம் திரிந்த செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவதினியே!

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனை
திருவிழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந்தனவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுலக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வங்சகர் போயகலம்
பொன்னின்செய் மண்டபதடதுள்ளே புகுந்து
புவன யெல்லாம் விளங்க
வன்னநடை மடவாளுமை கொனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டமென்று மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்றும் வேண்டும் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற்குமரேசா
கறையானைக் கிளையோனை கதிர்காமப் பெருமானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர்

## செல்வி நடராசாக்குருக்கள் ~ மீனாட்சி அம்மா

அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இலங்கை மணித்திரு நாட்டின் வடமால் அமைந்த யாழ் குடா நாட்டின் வடமராட்சி வடக்கு பகுதியில் கெருடாவில் என்னும் கிராமத்தில் பதி கொண்டிருக்கும் வள்ளி தெய்வயானை சமேத தொட்டில் கந்தசாமியார் அருளாட்சி பெற்று சிறப்புடன் விளங்குகின்றது.

இக் கிராமத்தில் நடராசாக் குருக்களுக்கும் இராஜேஸ்வரி அம்மாவுக்கும் இரண்டாவது மகளாக அவதரித்தார் மீனாட்சி அம்மா. இளம் பிரயாத்தில் கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி பெற்று அறிவை வளர்த்து சிறப்புற வாழ்ந்து வந்தார். இவர் சிறு வயதிலேயே தந்தை, தாய் இருவரையும் இழந்தார். இவர் தொட்டில் கந்தசாமியாரில் மிகுந்த பக்தியுள்ளவர் அது மட்டுமல்லமால் கந்த சாமியருக்கு தன்னாலன சரியைத் தொண்டுகள் புரிந்தார். இவர் சிறு பராயத்தில் இருந்தே தனது மூத்த சகோதரி பாலசுப்பிரமணியக் குருக்கள் பராசக்தி அம்மாவுடன் வாழ்ந்து வந்தார்.

பராசக்தியம்மா இறந்த பின்பும் பராசக்தியம்மாவின் பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார். இவர் தனது வயது முதிர்ந்த நிலையிலும் தனக்கென ஓர் வீடமைத்தார். இக் காலகட்டத்திலும் நோயினால் பாதிக்கப்பட்டு 29.04.2011 வெள்ளிக்கிழமை வள்ளி தெய்வயானை சமதே கந்தசாமியாரின் திருவடி சேர்ந்தார்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தலையே நீ வணங்காய்
தலை மாலை தலை கணிந்து
தலையாலே பலி தேரும் தலைவனைத்
தலையே நீ வணங்காய்

தொட்டில் கந்தசாமி கோயிலடி,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.
14.05.2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வழிபடு தெய்வங்களைப் பாடியது**

**அருள்மிகு தொட்டில் கந்தசாமிக் கடவுள்மீது பாடப்பட்டது**



வண்டுகள் மொய்க்கும் மாமலர்ச் சோலையின் -நடுவே
தொண்டர்கள் இசைபாடும் தொட்டிற் கந்தசாமிக் -கடவுளே
அண்டர்கள் மகிழ அசுரணைக் கொன்ற வேலவா
தண் தமிழில் இசைபாடும் அமரர் நடராசா மீனாட்சி
அம்மாவுக்கு அருள் புரிவாய் (ஆதி பரனே)

**கெருடாவில் கோட்டைச் சீமா முத்துமாரி அம்மன்மீது பாடப்பட்டது**



எங்கள் குலதெய்வமாம் முத்துமாரியம்மனே
உன் பாதம் சரண் அடைந்தேன்
அன்பரெல்லாம் உன்னைநாடி அம்மா முத்துமாரி
துன்பமது தொலைத்திடவே துயரநிலைகள் -அகன்றிடவே
என்புருகி பாடிநிற்பார் எங்கள் கெருடாவில் தாயே
உன்னிடத்தில் நாடிவந்தேன் ஏற்றருள்வாய் அம்மா
தினம் தோறும் வழிபட்டு வந்த என்னை
ஈடேற்றம் காண வழி செய்தாயே.

**யாழ் வண்ணார்வண்ணை**
**ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் தேவஸ்தானம் மீது பாடப்பட்டது.**
**(சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள்**
**அறக்கொடை நிதியம் வழங்கிய பாமாலை)**



நல்லை வீரமாகாளி அன்னை பாதம் நாளுமே
அன்னை மீனாட்சி மறவாள் அல்லும் பகலும்
அநவரதமும் அம்பிகையை எண்ணியே உருகி நிற்பாள்
கல்லுமே கரைந்துருக துதிகள் பாடி காளியவள் பதம்
துதித்து நிற்பாள் சொல்லும் செயலில் பக்தி
சொரிந்தாள் அன்னை
காளி பதத்தில் அவள் ஆத்மா பெறுக சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றால் தான் பிள்ளையா?

எம் அருமை இளையம்மாவே எம்மை விட்டு தூரதேசம் எங்கு சென்றீர்கள்? எம்மைத் தாலாட்டி சீராட்டி சோறூட்டி அன்பாக வளர்த்த அம்மாவே- இரவினில் மறக்க முடியாத கதைகள் கூறிக் கற்றலில் உயர்வு பெற வேண்டும் நல்வாழ்வு பெற வேண்டும் என்ற உங்கள் ஆசை பசுமை நிறைந்த நினைவுகளாக எமக்கு அறிவுரை தந்தீர்கள்- அதில் சுவாரஸ்யமான விடயங்களும் சிந்திக்கத் தக்க விடயங்களும் எங்கள் கோவிலின் பல வரலாற்றுக் கதைகளும் மறக்க முடியுமா? அந்த பசுஞ்சோலை நினைவுகள் என்றும் எமக்கு நினைவூட்டிக் கொண்டேயிருக்கும்.

இது சிவாலய விதிகளுக்கமைய பூசனை செய்து கொண்டிருக்கும் சிவசிறீ முத்துசாமிக் குருக்களின் கூற்று மூர்த்தி தலவிருட்ஷம், தீர்த்தம் ஆகிய சிறப்பு அம்சங்களுடன் யாழ் பிரதேசத்தின் வடபாலில் தொண்டை மாணாற்றின் கிழக்கில் தொட்டிலடிக் கந்தன் என்ற சிறப்பு நாமத்துடன் கெருடையம்பதியில் அமைந்துள்ளது. ஆலயம். நித்திய நைமித்திய பூசனைகளை திருவாளர் பாலசுப்பிரமணியக் குருக்கள் ஆற்றியவேளை அவர்தம் இல்லக்கிழத்தியின் மறைவின் பின் சந்ததியின் வழியில் முத்துசாமிக் குருக்கள் ஆற்றிவருக்கிறார். வுரலாற்றுப் பெருமை மிக்க இவ்வாலய முன்வாசலில் செல்வி மீனாட்சி அம்மையார் வீற்றிருக்கும் காட்சி என் முன்னே தண்டவமாடுகிறதென்றால் அன்னாரின் ஆத்மாவை எங்குவைப்பது? வானுறையும் தெய்வத்துள் தவிர வேறெங்கும் வைத்திட முடியாதே இது திண்ணம்.

மீனாட்சிஅம்மையாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கணபதியை வேண்டிநிற்கிறேன். அம்மையாரை இழந்து துடித்துக் கொண்டிருக்கும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி நிறைவு செய்கிறேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

29. 04. 2011

**த.து. ஜெகநாதன் ஐயா**

ஓய்வுபெற்ற மக்கள் வங்கி பிரதி முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு வைரவர்,
உடுப்பிட்டி வடக்கு நெற்கொழு காளி தேவி
தேவஸ்தானங்களின்

**பிரதமகுரு சிவஸ்ரீ ச. இராஜசேகரக்குருக்கள்**

வழங்கிய

## அனுதாபச்செய்தி

**அமரர் செல்வி நடராசாக்குருக்கள் மீனாட்சி அம்மா இறைபதம் அடைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் கவலையடைந்தேன். இவர் தொட்டிலல் கந்தசாமியாரின் அன்பே உருவானவர். வீட்டுக்கு வருவோரை இன்முகத்துடன் வரவேற்று விருந்து கொடுப்பதில் அவருக்கு நிகர் அவரே. முருகனுக்கு சரியைத்தொண்டு செய்வதில் வல்லவர். எனது மனைவியாரின் சிறிய தாய் ஆவார். தனது மக்களென நினைத்து வளர்த்து வந்தவர் ஆவார். அன்னாரின் குடும்பத்தாருக்கு எனது உளம் கனிந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு இவருடைய ஆத்மா சாந்தி பெற எல்லாம் வல்ல வள்ளி தெய்வயானை சமேத தொட்டிலல் கந்த சாமியாரை பிரார்த்திக்கின்றேன்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் துணை

# கந்த சஷ்டி கவசம்



துதிப்போர்க்கு வல்வினைபோந் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துத் - கதித்தோங்கும்
நிஷ்டையுங்கை கூடு நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடனஞ்செயும் மயிவா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக!
வருக வருக மயிலோன் வருக!
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக! வருக!
வ[illegible]வன் மருகா வருக! வருக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வரும்
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரிவண பவனார் ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
வினபவ சரவண விலாா நமோநம
நிபவ சரவண வீராா நமோநம
நிபவ சரவண நிற நிற நிறென
அசுரர் குடிகெடுத்தஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயும் பாசாங் குசமும்
பரந்த விழிகள்பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயம் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளையும்
நிறைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகமும் தீயும் தனியொளியொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு கண்டரமும்
ஆறிரு திண்புயத் அழகிள மார்பில்
பல்பூஷணமும் பதக்கமுமட தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நாலும் முத்தணி மார்பும்
செப்பழகு உடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிபட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இரு தொடை அழகும் இணைமுழநட தாளும்
திருவடியதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண
நகநக நகநக நகநக நகென
டிகுண டிகுகுண டிகுகுண டிகுகண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்துமுந்து முருகவேள் முந்து
ஏற்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியில் பாலனக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காகக்
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபால் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுற் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக குகத்தை வடிவேல் காக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தால் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகள் இரண்டும் கருணைவேல் காக்க
முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை ஆக
நாவிற் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் ஜாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைகடை முனியும்
கொள்ளிவாய் பேய்களும் குறளைப் பேய்களும் பெண்களைத்
தொடரும் பிரமராட் ஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட இரிசிகாட் டேரி
இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்படும் வண்ணம்
கனபூசை கொள்ளும் களியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைகள் உடனே பல கலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தன்னையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒட்டியப் பாவையும் ஒட்டியச் செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழி போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலாது தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப்பாசக் கயிற்றால்
கட்டு உடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டுகால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்க சொக்க சூர்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடிவேலால்
பற்று பற்று பகலவன் றணலெரி
தணலெரி தணலெரி தணரது வாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்பும் பிததம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிறங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கம் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றெனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெக்கா
மண்ணாளரசரும் மகிழ்ந்துறவாகவும்
உன்னைத் துகிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்காமத்துறை கதிர்வேல் முருகா
பழனிப்பதிவாழ் பாலகுமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வராயா
சமராபதிவாழ் சண்முகத்தரசே
காரார் கோலமகள் நன்றாய்
என்நா இருக்க யினைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாசவினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குர வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத்துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரியமளித்து
மைந்தனென் மீது உன் மனமகிழ்ந்தளித்து
தஞ்சமென்றறடியாரழைத்திட அருள்செய்
கந்தசஷ்டி கவசம் விரும்பிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலன் தேவராஜன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன் ஒரு நினைவது வாகிக்
கந்தசஷ்டி கவசம் இதனை
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறு ருக்கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீரணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரென்மார் சேர்ந்தங்கருளுவார்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லொழில் பெறுவர்
எந்தநாளும் ஈரெட்டாய் வாழ்வார்
கந்தர்கை வேலாம் கவசத்தடியை
வழியைக் காண மெய்யாய் விளங்கு
விழியால் காண வெருண்டிடம் பேய்கள்
பொல்லா தவரை பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வசத்துரு சங்காரத்தடி
அறிந்தென துள்ளும் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைதட துணிந்தகை யதனால்
இருபத்தேள்வார்க்கு உவந் தமுதளிக்கும்
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத் தடுத்தாட் கொள் என்றெனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பாயுதனே இடும்பா போற்றி
வெற்றி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நடமிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

கவசம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நண்பகல் 12.00 மணியாக இருக்கும் போது ஏனைய நாடுகளின் நேரம்

| | | | |
|---|---|---|---|
| 1. | அமெரிக்கா | முற்பகல் | 01.30 காலை |
| 2. | கனடா | முற்பகல் | 01.30 காலை |
| 3. | லண்டன் | முற்பகல் | 06.30 காலை |
| 4. | பிரான்ஸ் | முற்பகல் | 07.30 காலை |
| 5. | இத்தாலி | முற்பகல் | 07.30 காலை |
| 6. | சுவிஸ் | முற்பகல் | 07.30 காலை |
| 7. | எகிப்து | முற்பகல் | 08.30 காலை |
| 8. | சோவியத் ரஷ்யா | முற்பகல் | 09.30 காலை |
| 9. | ஈரான் | முற்பகல் | 10.00 காலை |
| 10. | இந்தியா | நண்பகல் | 12.00 நண்பகல் |
| 11. | பர்மா | பிற்பகல் | 01.00 மாலை |
| 12. | மலேசியா | பிற்பகல் | 02.30 மாலை |
| 13. | பிலிப்பைன்ஸ் | பிற்பகல் | 02.30 மாலை |
| 14. | சீனா | பிற்பகல் | 02.30 மாலை |
| 15. | தாய்லாந்து | பிற்பகல் | 01.30 மாலை |
| 16. | யப்பான் | பிற்பகல் | 03.30 மாலை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள் சில....

1. வாழத் தெரிந்தவனுக்கு வரும் சோதனைகள் எல்லாம் வேதனைகளல்ல. அது இலட்சியப் பாதையில்விடிவிலக்குகள்
2. இலட்சியம் இல்லாத மனித வாழ்வு ஆழ்கடலில்துடுப்பில்லாத படகு போன்றது.
3 .பணம் இல்லாவிட்டால் உன்னை யாருக்கும் தெரியாதுபணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது.
4. வரட்டுக் கௌரவம் வாழ்கைக்குஉதவாது.முரடடுப் பிடிவாதம் முன்னேற இரு சக்கரங்கள்.
5. விடா முயற்சியும் குறிக்கோளும் வெற்றிப் பாதையில்முன்னேற இரு சக்கரங்கள்.
6 நீங்கள் எதிரிக்காக நெருப்பை எரித்தால் அதுஉங்களை எரிக்கும்.
7. வாழ்கையின் உண்மையான குறிக்கோல் அழிவில்லாத வாழ்க்கையை தெளிவாக அறிந்து கொள்வதாகும்.
8. பத்து பெரியவர் மத்தியில் அமைதியாக இரு அப்போது வாழ்கையை தெளிவாக அறிந்து கொள்வதாகும்.
9. மற்றவர்கள் எதை எனக்குச் செய்யக் கூடாதென்று நினைக்கிறார்களோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.
10. ஒருவர் பேசியது புண்படுத்தப்படுவதில்லை. நாம் எடுத்துக்கொள்ளும் விதம்தான் புண்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது நாட்டு மூலிகைகளின் மருத்துவக் குணங்கள்

**வல்லாரை:**

1. தோல், நரம்பு, குருதி சம்பந்தமான நோய்களைத் தீர்ப்பதற்கு உதவுகின்றது.
2.தோலில் ஏற்படும் கொப்பளங்கள், வீக்கங்கள் போன்றவற்றிற்கு களிம்பாகவும், பொடியாகவும் மருத்துவர்களால் பயன்படுகிறது.
3. காலையில் வெறும் வயிற்றில், மிளகுடன் சேர்த்து மென்று தின்று வந்தால் வெட்டைச்சூடு, கண்புகைச்சல், நீர்க்கடுப்பு, கண்ணெரிவு தணியும்.
4. பல்லில் படிந்துள்ள மஞ்சள் நிறத்தைப்போக்க வல்லாரை இலையால் பல்லைத் தேய்த்துவர மறையும்.
5. மூளைக்குச் சுறுசுறுப்பையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும்.
6. தெளிவான கண்பார்வைக்கும், நீண்ட ஆயுளுக்கும் உதவும். வல்லாரையைத் துவையலாகப் பச்சையாகவும் சூப்பு செய்து சாப்பிடலாம். 5-10கிராம் அளவு இலையை உலர்த்தி பொடி செய்து நாளொன்றுக்கு மூன்றுமுறை மருந்தாகவும் உட்கொள்ளலாம்.

**முருங்கைக்கீரை:**

இதில் அதிகளவு கல்சியம், இரும்புச்சத்து உள்ளது.

1. வயிற்றில் உள்ள வாய்வுக்குணத்தை நீக்கும்.
2. முருங்கைக்கீரையை தேங்காய் எண்ணெயில் வதக்கி இடுப்புவலி, வாதமூட்டுவலி முதலியவற்றுக்கு ஒத்தடம் கொடுக்கக் குணமாகும்.
3. முருங்கை இலையையும், மிளகையும் நசுக்கி சாறு எடுத்து தலைவலிக்கு நெற்றியில் தடவலாம்.
4. இலையை அரைத்து வீக்கங்களில் பூச வீக்கம் தணியும்.
5. முருங்கைப் பிஞ்சைப் பொரியல் செய்து உண்டால் மிகுந்த வெப்பம் நீங்கும், பெண்களின் உதிரப்போக்கு கட்டுப்படுத்தப்படும்.
6. முருங்கைப்பட்டைச்சாறு, குப்பமேனிக் கீரைச்சாறு இரண்டையும் சேர்த்து தேங்காய் எண்ணெய் விட்டு காய்ச்சி சொறி, சிரங்குமீது தடவ அது நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெந்தயம்:**

1. வெந்தயம் போட்டுக் கொதிக்க வைத்த நீர் தொண்டை வலியைப் போக்கும்.
2. வெந்தய நீர் இரத்தத்தில் வெல்லத்தின் அளவைக் குறைக்கும்.
3. புதிய வெந்தயக்கீரையை அரைத்து முகத்தில் தடவினால் கரும்புள்ளிகள், முகப்பருக்கள் நீங்கித் தோல் பொலிவுறும்.
4. உலர்ந்த தோல் உள்ளவர்கள் வெந்தயக் கீரையை அரைத்து இரவில் தடவிவிட்டு காலையில் மென்சூடான நீரில் கழுவவேண்டும்.
5. வயிற்றுவலி உண்டாகும்போது அல்லது வயிற்றுப்போக்கின்போது சிறிதளவு வெந்தயத்தை வாயில் போட்டு நீருடன் குடித்தால் குணமாகும்.
6. பால் ஊட்டும் தாய்மார்க்கும், கர்ப்பிணிகளுக்கும் சிறந்தது.

**பப்பாசி:**

1. மூல நோய்கள், மலர்ச்சிக்கல், சிறுநீரகக் கற்கள் போன்றவற்றைக் குணமாக்கும்.
2. சிறந்த உணவாகும்.

**வெள்ளைப்பூடு (உள்ளி):**

1. தோல் சம்பந்தமான நோய்கள், ஆஸ்துமா, உயர்குருதி அமுக்கம் நோய்களைத் தணிக்க சிறந்த மருந்து.
2. இரத்தத்தில் கொலஸ்திரோலின் அளவைக் கட்டுப்படுத்தும்.
3. பக்ரீரியா, பங்கசு ஆகியவற்றை அழிக்கும்.
4. மூட்டு வீக்கங்களைக் குணப்படுத்தும்.
5. ஒவ்வொரு நாளும் வெள்ளைப்பூண்டில் ஒரு பல் உண்டு வந்தால் உடல் நலம் பேணப்படும்.

**கடுக்காய்:**

1. இரைப்பை, குடல், இரத்தம் இவைகளைத் தூய்மையாக வைத்திருக்கக் கடுக்காய்ப் பொடி உதவும். இதுவே காயகல்ப்பம் எனப்படும்.
2. கடுக்காய் தினமும் உண்டு வந்தால் சிறுநீரகம், இதயநோய்கள் வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. கொட்டையைப் பொடியாக்கி தினம் அரைக்கரண்டி தேனில் குழைத்து காலையும் மாலையும் சாப்பிட்டுவர இளமைத் தோற்றம் தரும்.

**துளசி:**

1. ஒரு பிடி துளசி இலைகளைக் காலையும், மாலையும் பச்சையாகச் சாப்பிட அநேக வியாதிகள் நீங்கும். உடலின் எலும்பும், தசைகளும் கெட்டியாகும். பல் உறுதி பெறும்.


2. நெஞ்சுச்சளி, நெஞ்சுவலி, பித்தம், கணச்சூடு தணிக்கும்.

3. ஒருபிடி துளசி இலையை மென்று விழுங்கி நீரைக் குடித்தால் மூளைபலம் பெறும். ஞாபக சக்தி பெருகும். 40நாட்கள் பாவிக்க வேண்டும்.

# இரத்தப் புற்றுநோய்

இரத்தப் புற்றுநோய் என்றால் இரத்தத்தில் காணப்படும் வெண் குருதிக் கலங்களின் அளவானது கூடு தலாகக் காணப்படும். இதனால் மண் ணீரலானது வீங்கிக் காணப்படும். இரத்தச் சோகை ஏற்படும். உடலின் நோய் எதிர்க்கும் சக்தி குறைவடையும். இந்நோயை உடலில் இருந்து முற்றாகக் குணமடையமாட்டாது. இதற்கான அறிகுறிகள்:

01. வெண்குருதிக் கலங்கள் கூடுதலாகக் காணப்படும்.
02. இரத்தச் சோகை ஏற்படும்.
03. மூச்சுத்தினறல் ஏற்படும்
04. இரத்த வாந்தி ஏற்படும்.
05. ஏதாவது கிருமித் தொற்று ஏற்படில் குணமடைவதற்கான காலம் நீண்டு காணப்படும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு வினா விடை

01. இருதயத் துடிப்பை அதிகரிக்கும் ஓமோன் எது?
**'அதிரினலின்'**

02. டெஸ்ட்போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய வீரர் யார்?
**முத்தையா முரளிதரன்**

03. உலகிலேயே மிகப் பழமையான தேசியக்கொடி எது?
**டென்மார்க் நாட்டின் தேசியக்கொடி**

04. இந்த நூற்றாண்டின் சிறந்த அரசியல் தலைவர் யார்?
**நெல்சன் மண்டேலா**

05. உலகின் ஆழமான இடமாகக் கருதப்படுவது எது?
**மரியானா ஆழி**

06. அமெரிக்காவில் அடிமை முறையை ஒழித்தவர் யார்?
**ஆபிரகாம் லிங்கன்**

07. உலகிலேயே கட்டாய இராணுவப் பயிற்சி அளிக்கப்படும் நாடு எது?
**இஸ்ரேல்**

08. "சத்தியசோதனை" என்ற பிரசித்தி பெற்ற நூலை எழுதியவர் யார்?
**மகாத்மா காந்தி**

09. நாட்டின் உற்பத்தி சாதனங்கள் அனைத்து சமூகத்தின் பொதுவுடைமையாக இருக்க வேண்டும் என்ற கம்யூனிச கொள்கையை வகுத்த மாமேதை யார்?
**கார்ள் மார்க்ஸ்**

10. சாரணர் இயக்கத்தை ஆரம்பித்தவர் யார்?
**பேடன் பவல் பிரபு**

11. சூரிய மண்டலத்தின் பெரிய துணைக்கோள் எது? **நிலவு**

12. பிரான்ஸ் நாட்டின் செவாலியர் விருதுபெற்ற முதல் இந்தியர் யார்?
**நடிகர் திலகம் சிவாஜி கணேசன்**


13. மருத்துவ அறிவியலின் தந்தை யார்?
**ஹிப்போகிரடிஸ்**

14. உலகின் மிக அகலமான பாலம் எது?
**அவுஸ்திரேலியாவிலுள்ள சிட்னி ஹார்பர் பாலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்



அன்புடையீர்!

28.04.2011 அன்று சிவபேறு அடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், எங்கள் நல் வாழ்விற்கு தன்னை அர்ப்பணித்து எம்மை துயரில் ஆழ்த்திய எங்கள் தாயார் நடராசா மீனாட்சி அம்மா அவர்களின் மரணச் செய்தி கேட்டு உடன்வந்து உதவியவர்களுக்கும், ஈமக் கிரியைகளின்போது நேரில் கலந்து கொண்டவர்களுக்கும், எமது துயரில் உள்ளூரிலும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம், தந்திமூலமும், பத்திரிகை மூலமும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மற்றும் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், மற்றும் இந் நினைவு மலரினை சிறப்பான முறையில் அச்சிட்ட Raj Prem Digital media நிறுவனத்திற்கும், அந்தியேட்டி சபிண்டீகரணத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது உள்ளங் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி

வணக்கம்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

தொட்டில் கந்தசாமி கோயிலடி,
கெருடாவில் தெற்கு,
தொண்டைமானாறு.
14.05.2011

Raj Prem Digital media
Kerudavil
myrajprem@gmail.com myrajprem@hotmail.com myrajprem@yahoo.com
0772224587 0776679387

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

சின்னாச்சி அம்

பொன்னுச்சாமிக்குருக்கள்
+
நாகரத்தினம்மா

தங்கராசாதேசிகர்

செல்லையாக்குரு
+
செல்லமுத்து அம்

இராஜேஸ்வரி அ
+
முத்துக்குருநாதர் - நடரா

பராசக்தி அம்மா
+
பாலசுப்பிரமணியக் குருக்கள்

தையல்நாயகி | உலகுருநாதர் | ஞானசக்தி | முத்துச்சாமிக் குருநாதர் | நவலட்சுமி

சதாசிவக்குருக்
+
செல்லம்மா

சந்தால

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சாவழி

...ன்னாச்சி அம்மா

...லையாக்குருக்கள் + ...ல்லைமுத்து அம்மா

முத்துச்சாமிக்குருக்கள் + தையல்நாயகி

...ராஜேஸ்வரி அம்மா + ...ாதர் - நடராசாக்குருக்கள்

பாலசுப்பிரமணியக்குருக்கள்

வாலாம்பிகை அம்மா

...ாசிவக்குருக்கள் + செல்லம்மா

நடராசக்குருக்கள்
மீனாட்சி அம்மா

...மி

சந்தாலக்சுமி

விசயலட்சுமி

மோகனகுமார்

சிவலோஜினி

செந்தில்செல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

@n
Sci
mathes
helth
Tcum'l
Sin

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org